## சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் - 2014

சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகர்த்த மன்றத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2005 இன் 19 ஆம் இலக்க சௌமிய மூர்த்தி தொண்டமன் ஞாபகர்த்த மன்ற சட்டத்தின் 11(2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை சௌமிய மூர்த்தி தொண்டமான் ஞாபகர்த்த மன்றத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01**

முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கல்கள் என கணக்குகளில் காட்டப்பட்டிருந்த ரூபா 11,653,854 தொகை பெறுமதி தொடர்பான தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நியமத்தின் பந்தி இலக்கம் 47 இன் பிரகாரம் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலையான சொத்துக்கள் கணக்கில் காட்டப்பட்டுள்ள கிரயம் ரூபா 537,130,291 தொகையான சொத்துக்கள் தொடர்பாக அவ்வேற்பாடுகளின் படி செயற்பட்டிருக்கவில்லை.

(ii) 2005 ஆண்டின் போது மன்றத்திற்கு சாட்டப்பட்டிருந்த ரூபா 272,000,000 தொகை பெறுமதியான காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியினை வெவ்வேறாக இனங்காணாமல் மொத்தப் பெறுமதியில் 50 சதவீதத்தினை கட்டிடங்களின் பெறுமதியெனக் கணித்து பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

இணைய சேவை கம்பனி ஒன்றினால் பிரஜாசக்தி நிலையங்களில் 2009 திசெம்பர் 16 ஆம் திகதி முதல் 2013 நவம்பர் 01 திகதி வரை V-SAT அன்டெனா பராமரிப்பு சேவைச் சந்தர்ப்பங்கள் 120 இல் 96 இற்காக ரூபா 7,008,000 தொகை மற்றும் 2013 திசெம்பர் 01 முதல் 2014 பெப்ரவரி 28 திகதி வரையான 03 மாதங்களுக்காக ரூபா 1,600,000 தொகைக்கான இணைய சேவை கட்டணம் உட்பட செலுத்த வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 8,608,000 இனை கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகள் தொடர்பாக வரிசை அமைச்சில் இருந்து மீண்டுவரும் செலவுகளுக்காக ரூபா 4,261,841 தொகையொன்று மன்றத்திற்கு மீளளிப்பு செய்யப்பட வேண்டியவை என காட்டப்பட்டிருந்த போதிலும் வரிசை அமைச்சின் அறிக்கைகளின் பிரகாரம் மன்றத்திற்கு அவ்வாறான மீளளிப்பு செய்ய வேண்டிய தொகையொன்று காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மன்றத்திற்கு கிடைக்க வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 8,572,886 இற்கான தொகையொன்று மற்றும் மன்றத்தினால் செலுத்த வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 8,937,243 இற்கான கணக்கு மீதிகள் தொடர்பாக காலப்பகுப்பாய்வு ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வ/ப இலங்கை அரச வணிக (நானாவித) கூட்டுத்தாபனத்தில் இருந்து பண்டங்கள் கிடைக்கப்பெற்று ஒரு மாதத்துள் பணம் செலுத்தும் அடிப்படையில் 2014 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக செலுத்த வேண்டிய ரூபா 78,397,494 தொகை 2016 ஆம் ஆண்டு இறுதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆண்டின் போது நடத்தப்பட்ட தேசத்திற்கு மகுடம் விழாவிற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த வியாபார சிறு அறைகளுக்காக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு செலுத்த வேண்டிய ரூபா 282,567 தொகை மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரையும் தீர்த்திருக்கவில்லை.

(இ) நீண்ட காலமாக முன்கொண்டு வந்து காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 12,627,270 தொகைக்கான முற்பணங்கள் மற்றும் கடன்பட்டோர் மீதிகள் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 5,356,146 தொகைக்கான கடன்கொடுத்தோர் மீதிகளை அறவீடு செய்வதற்கு அல்லது தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) 2012 நவம்பர் 07 திகதி நடாத்தப்பட்ட பொது முயற்சிகளுக்கான குழுவின் கட்டளை ஒன்றின் பிரகாரம் மன்றத்தினால் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கட்டிடமொன்றிற்காக செலவிடப்பட்ட மறுசீரமைப்பு விடயங்களுக்காக மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 773,172 இற்கான தொகையினை 2016 வருட இறுதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) 2013 ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்கு மற்றும் மீளாய்வாண்டு தொடர்பாக வரிசை அமைச்சில் இருந்து மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய முறையே ரூபா 6,813,624 தொகை மற்றும் ரூபா 49,161,510 தொகையாகிய பெற வேண்டிய மீதிகள் 2016 ஆண்டு இறுதி வரையும் மீளளிப்புச் செய்திருக்கவில்லை. எனினும் மன்றம் இது தொடர்பாக நடவடிக்கைகள் ஏதும் எடுத்திருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1998 திசெம்பர் 31 திகதிய ஊழியர் சேமலாப நிதியத்தின் திருத்திய சட்டத்தின் பகுதி II இன் பந்திகள் 10(1) மற்றும் (2) | 2012 செப்தெம்பர் முதல் 2013 மார்ச் வரை கூட்டுத்தொகை ரூபா 4,205,282 தொகையான ஊழியரின் மற்றும் தொழில் தருனரின் பங்களிப்புத் தொகையினை ஊழியர் சேமலாப நிதிக்கு அனுப்பியிருக்கவில்லை. |
| (ஆ) 2015 இன் 19 ஆம் இலக்க சௌமிய மூர்த்தி தொண்டமன் ஞாபகர்த்த மன்ற சட்டத்தின் 10 ஆம் பிரிவின் 2,3 மற்றும் 4 ஆம் பந்திகள் | தனக்குரிய அதிகாரத்தை மற்றும் கடமையினை செயற்படுத்தும் போது மற்றும் நிறைவேற்றும் போது மேற்கொள்ளப்படும் அனைத்துச் செலவுகளும் மன்றம் உருவாக்கிய நிதியத்தில் இருந்து மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் மீளாய்வாண்டின் போது மன்றம் உழைத்திருந்தது ரூபா 3.86 மில்லியன் ஆகக் காணப்பட்டதுடன் மீதியான அனைத்து செலவுகளுக்கும் தேவையான நிதியம் வரிசை அமைச்சின் ஊடாக அரசினால் வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 371 | குறிப்பிட்ட விடயம் முடிவடைந்த உடனேயே பெற்றிருந்த முற்பணங்கள் தீர்க்கப்பட வேண்டுமெனினும், பிரஜாசக்தி செயற்திட்டத்தின் முகாமையாளருக்கு 2011 மற்றும் 2013 ஆண்டுகளின் போது வழங்கியிருந்த முறையே ரூபா 318,867 தொகை மற்றும் ரூபா 118,071 தொகையான முற்பணங்கள் 2014 திசெம்பர் 31 திகதி வரையும் தீர்த்திருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 757 | மன்றத்தின் அனைத்துத் துறைகளையும் அணவல் செய்யும் விதமாக மீளாய்வாண்டிற்கான வருடாந்த பண்டங்கள் கணிப்பீடு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | (iii) நிதிப் பிரமாணம் 139(1) | அனைத்து கொடுப்பனவு உறுதிச் சான்றுகளும் சான்றுபடுத்துவதற்காக அதிகார மளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால் சான்றுபடுத்தப்பட வேண்டுமெனினும் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது கூட்டுப்பெறுமதி ரூபா 157,516 இற்கான 06 உறுதிச் சான்றுகள் சான்றுபடுத்தப்படாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2006 பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 8.9.1 ஆம் பந்தி | 2009 செப்தெம்பர் முதல் 2014 மார்ச் வரை உடன்படிக்கை ஒன்று இன்றி V-SAT அன்டெனா பராமரிப்புச் சேவையினை பெற்று அக் காலப்பகுதியில் ரூபா 51,099,464 இற்கான தொகையொன்று தனியார் சேவை நிறுவனமொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறிப்பிட்ட சேவை நிறுவனத்தினால் 2009 ஆகஸ்ட் 14 திகதி உடன்படிக்கையின் வரைவு ஒன்றினை மன்றத்திற்கு சமர்ப்பித்திருந்த போதிலும் மன்றம் மற்றும் உரிய வரிசை அமைச்சு இது தொடர்பாக கவனம் ஏதும் செலுத்தாமல் தொடர்ச்சியாக குறிப்பிட்ட சேவை விடயங்கள் பெற்று அதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான மன்றத்தின் நிதி விளைவுகள் ரூபா 48,715,500 இற்கான பற்றாக்குறை ஒன்றாக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 50,661,764 ஆகக் காணப்பட்டமையால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் பற்றாக்குறை ரூபா 1,946,264 இனால் குறைந்திருந்தது. பிரஜாசக்தி செயற்திட்டத்தின் நன்கொடை ரூபா 43,997,693 இனால் மற்றும் விளம்பர மற்றும் மேம்படுத்தல் செலவுகள் ரூபா 4,950,987 தொகையினாலும், சம்பளங்கள், ஊதியங்கள் மற்றும் ஊழியர் நலன்கள் ரூபா 14,111,806 இனாலும் அதிகரித்திருந்த போதிலும் அரசாங்க மானியம் ரூபா 63,516,683 இனால் அதிகரித்திருந்தமை இந்த பற்றாக்குறை குறைவதற்கு முக்கியமாக பாதித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 4 வருடங்களினதும் நிதி விளைவுகளை மீளாய்வு செய்யும் போது 2010 ஆண்டில் ரூபா 11,511,530 தொகையான பற்றாக்குறை 2013 ஆண்டளவில் ரூபா 50,601,704 தொகை வரை அதிகரித்து 2014 ஆண்டிளவில் ரூபா 48,715,500 தொகை வரை குறைந்திருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுக்கு ஊழியர் ஊதியம், நடைமுறை அல்லாத சொத்துக்களின் பெறுமானத்தேய்வினை மீண்டும் சீராக்கல் செய்யும் போது 2010 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை மன்றத்தின் பங்களிப்பு முறையே ரூபா 38,537,938, ரூபா 37,117,620, ரூபா 37,819,654, ரூபா 57,143,900, ரூபா 69,018,051 தொகைகளாகியிருந்தது. 2013 மற்றும் 2014 ஆண்டுகளில் மன்றத்தின் பங்களிப்பு அதிகரிப்பிற்கு சம்பளம் அதிகரிப்பு விஷேடமாகப் பாதித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

### 4.1 செயலாற்றுகை

------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான மூலதனச் செலவுகளுக்காக ரூபா 70 மில்லியன் தொகை நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது மூலதனச் செலவுகள் என ரூபா 37 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் அச் செலவுகள் தொடர்பான தகவல்கள் செயலாற்றுகை அறிக்கையில் உட்படுத்தியிருக்கவில்லை. மேலும், தொண்டமன் தொழிற்பயிற்சி நிலையத்தின், தொண்டமன் பண்பாட்டு நிலையத்தின் மற்றும் தொண்டமன் விளையாட்டுத் தொகுதியில் மூலதனச் செலவுகளுக்காக ரூபா 29 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்கான செயற்பாடுகள் ஏதும் நிறைவேற்றியிருக்கவில்லை.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயலாற்றுகை அறிக்கையின் படி பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2006 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த பிரஜாசக்தி மற்றும் நவசக்தி செயற்திட்டத்தின் கீழ் ஓராண்டின் போது 50,000 பிள்ளைகள் மற்றும் இளைஞர்களுக்கு தகவல் தொழிநுட்ப பயிற்சி வழங்குவதற்கும் மற்றும் 200 இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுப்பதற்கும் திட்டமிட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 3,352 மாணவர்கள் தகவல் தொழில்நுட்ப பயிற்சிக்காக சேர்க்கப்பட்டிருந்ததுடன் 2006 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரை 39,140 மாணவர்களுக்கு மாத்திரம் தகவல் தொழிநுட்ப பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் போது இளைஞர் யுவதிகளுக்காக வழங்கிய தொழில்கள் பற்றிய விவரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது பிராந்திய பிரஜாசக்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 2 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாண்டின் போது பிரஜாசக்தி நிலையங்கள் ஏதும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டிற்காக காலத்தின் தேவைக்கேற்ப 400 இளைஞர்களுக்கு பொருத்தமான தொழிற்பயிற்சி வழங்குவதற்காக தொண்டமன் தொழிற்பயிற்சி நிலையத்திற்காக ரூபா 24 மில்லியன் செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆண்டின் போது 12 பாடநெறிகளுக்காக 340 இளைஞர்கள் (85 சதவீதம்) மாத்திரம் சேர்ப்பதற்கு இயலுமாக இருந்ததுடன் அவர்களில் 231 இளைஞர்கள் மாத்திரம் பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். அதன் பிரகாரம் 109 இளைஞர்கள் (32 சதவீதம்) பாடநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர் என அவதானிக்கப்பட்டது. மேலும் மீளாய்வாண்டின் போது பயிற்சி வழங்குவதற்காக சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த இளைஞர்களின் எண்ணிக்கையை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 9 சதவீதத்தினால் வீழ்ச்சி ஒன்றும் அவதானிக்கப்பட்டது.

(iv) தொண்டமன் பண்பாட்டு நிலையத்தின் மூலம் வருடாந்தம் 240 மாணவர்களுக்கு பண்பாட்டு பாடநெறிகள் நடத்துவதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் செயலாற்றுகை அறிக்கையின் பிரகாரம் 35 மாணவர்களுக்கு மாத்திரம் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.

(v) தொண்டமன் விளையாட்டுத் தொகுதியில் 2014 ஆண்டின் போது 1000 இளைஞர் யுவதிகளுக்கு விளையாட்டு வசதிகள் பெற்றுக்கொடுப்பதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் செயலாற்றுகை அறிக்கையின் படி 2014 ஆண்டின் போது விளையாட்டு வசதிகள் பெறுவதற்காக பதிவு செய்யப்பட்டிருந்தது இளைஞர் யுவதிகள் 110 பேர் மாத்திரமே.

## 4.2 முகாமைத்துவத் தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றத்தினால் நடாத்தப்படும் 42 பிரஜாசக்தி நிலையங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் மேலும் 35 பிரஜாசக்தி நிலையங்கள் நிர்மாணிப்பதற்காக 2012 ஆம் ஆண்டின் போது காணி அளவை விடயங்கள் மேற்கொள்வதற்காக ரூபா 2,359,298 தொகை ஒன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், 2016 ஆண்டு இறுதி வரை அக் காணிகளை மன்றத்தின் பேருக்கு உரித்தாக்கியிருக்கவில்லை.

(ஆ) 2005 இன் 19 ஆம் இலக்க சௌமியமூர்த்தி தொண்டமன் ஞாபகர்த்த மன்றச் சட்டத்தின் 10(2) ஆம் பிரிவின் கீழ் மன்றத்திற்கு சாட்டப்பட்டு மூலதனப்படுத்தியிருந்த காணிகள் மற்றும் கட்டிடங்களுக்காக உரித்துறுதிகள் தயாரித்தல் 2016 திசெம்பர் வரையும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) பிரஜாசக்தி செயற்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுத்திருந்த பல பிரதேசங்களில் வெளிக்கள கூட்டிணைப்பு விடயங்களுக்காக 2009 ஆண்டின் போது அமைச்சினால் மன்றத்திற்கு ரூபா 20,484,000 வழங்கப்பட்டிருந்தது. நியமனக் கடிதமொன்று அல்லது குறித்தொதுக்கிய வேலைச் சாட்டுதல் இன்றி மற்றும் உண்மையாகவே நிறைவேற்றப்பட்ட கடமைகள் பற்றி உறுதிப்படுத்தல் இன்றி அதற்காக 90 உத்தியோகத்தர்களுக்கு 2010 ஆண்டு முதல் 2013 ஏப்ரல் வரையான காலப்பகுதிக்காக அப் பணம் செலுத்தப்பட்டிருந்தது.

மேற்குறிப்பிட்டவாறு வெளிக்கள கூட்டிணைப்பு விடயங்கள் தொடர்பாக காணப்பட்ட பலவீன முகாமைத்துவத்தின் காரணமாக மன்றத்தின் செயற்திட்ட முகாமையாளர் மற்றும் செயற்திட்ட கூட்டிணைப்பாளரினால் 2011 ஏப்ரல் முதல் 2013 ஏப்ரல் வரையான காலப்பகுதிக்காக போலியான ஆவணங்கள் சமர்ப்பித்து முகாமையாளரின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிற்கு கூட்டிணைப்பாளர் படிகளில் இருந்து ரூபா 4,252,500 தொகை மோசடியான முறையில் செலவு வைக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணை ஒன்றின் பின்னர் அவர்கள் திருப்பி செலுத்துவதற்காக இணங்கி 2014 மே 25 திகதி அளவில் அவற்றில் ரூபா 1,050,000 தொகை செலுத்தியிருந்ததுடன் மீதியாகிய ரூபா 3,202,500 இற்கான தொகையினை 2016 வருட இறுதி வரையும் அறவீடு செய்திருக்கவில்லை.

மேலும் 2010 ஆண்டில் வெளிக்கள கூட்டிணைப்பு விடயங்களை பொறுப்பேற்ற நாள் முதல் 2011 மார்ச் வரையான காலப்பகுதியில் வெளிக்கள கூட்டிணைப்பு படியாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 5,265,000 தொகையொன்று தனியார் வங்கிக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டிருந்தமை தொடர்பாக மன்றத்தினால் விசாரணையொன்று நடாத்தியிருக்கவில்லை.

(ஈ) நீண்ட காலம் முதல் வரிசை அமைச்சிலிருந்து மன்றத்திற்கு வழங்கியிருந்த தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் 04 வாகனங்களை மன்றத்திற்கு உரித்தாக்கி கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

**4.3 விளைவற்ற சொத்துக்கள்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பாவணையில் இருந்து அகற்றப்பட்டிருந்த முற்றாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த ரூபா 5,396,901 தொகை கிரயத்தையுடைய 57 மோட்டார் சைக்கிள்களை கணக்காய்வுத் திகதியாகிய 2016 நவம்பர் 30 திகதி வரை விற்பனை செய்வதற்கு அல்லது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மன்றத்தினால் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் ஒன்று 2014 நவம்பர் 03 திகதி முதல் பழுதுபார்த்தல் வேலைக்காக தனியார் கராஜ் ஒன்றிற்கு ஒப்படைத்திருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியாகிய 2016 நவம்பர் 30 திகதி வரை வாகனத்தை பழுதுபார்க்கப்படாமல் கராஜில் வீணாக நிறுத்தி வைத்திருந்தது அவதானிக்கப்பட்டது.

(இ) சுய தொழில் கடன் செயற்திட்டத்தின் கீழ் (Self Employment Loan Project) பிரஜாசக்தி நிலையங்களுக்கு வழங்குவதற்காக 2014 திசெம்பர் 01 திகதி ரூபா 4,048,000 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த 44 சீமெந்து அச்சுக்கல் இயந்திரங்கள் 2015 பெப்ரவரி 24 திகதி நீதிமன்றக் கட்டளை ஒன்றின் காரணமாக பிரஜாசக்தி நிலையங்களுக்கு வழங்க முடியாமல் கணக்காய்வுத் திகதியாகிய 2016 நவம்பர் 30 திகதி வரை நோவுட் தொண்டமான் விளையாட்டு தொகுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டு பயனற்று காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. மேலும், வெகுமதியாக பகிர்ந்தளிப்பதற்காக கடன் அடிப்படையில் 2014 திசெம்பர் 30 திகதி கொள்வனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 2,794,368 தொகைக்கான கோயில் மணிகள், பித்தளை பூசை விளக்குகள், மெய்வளர்ச்சி உபகரணங்கள் மற்றும் விளையாட்டு உபகரணத்தொகுதிகள் பகிர்ந்தளிக்கப்படாமல் 2016 திசெம்பர் 30 திகதி வரை அவ் விளையாட்டுத் தொகுதியிலேயே களஞ்சியப்படுத்தப்பட்டுக் காணப்பட்டது.

(ஈ) 2007, 2008 மற்றும் 2009 ஆண்டுகளின் போது பிரஜாசக்தி செயற்திட்டத்தின் கீழ் 42 பிரஜாசக்தி நிலையங்களுக்கு இணையச் சேவை வழங்குதல், அதற்கான அறிவுரை கட்டணம் செலுத்துதல், 42 V-Set அன்டனா உபகரணத் தொகுதிகள் கொள்வனவு செய்தல் மற்றும் அவ் உபகரணங்களை பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் என்பவற்றிற்காக ரூபா 131,404,288 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் 2014 மார்ச் 01 திகதி முதல் இணைய சேவை வழங்குதல் நிறுத்தப்பட்டதன் காரணமாக அந்த 42 உபகரணத் தொகுதிகளும் கணக்காய்வுத் திகதியாகிய 2016 வருட இறுதி வரை விளைவற்றுக் காணப்பட்டது. எவ்வாறாயினும் இந்த சேவை நிறுத்தப்படல் தொடர்பான பணிப்பாளர் சபையின் தீர்மானம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிதிக்கூற்றுக்களில் நடைமுறை சொத்துக்களின் கீழ் ரூபா 398,999 கிரயத்தையுடைய வற்புகைப்பதிப்பு இருப்பொன்று நீண்ட காலம் முதல் உரிய சாரார்களுக்கு வினியோகிக்கப்படாமல் பயன்பாடற்றுக் காணப்பட்டது.

## 4.4 பெறுகைகள் செய்முறை

மீளாய்வாண்டின் போது 17 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா 71,945,921 தொகை பெறுமதியான மெய்வளர்ச்சி உபகரணங்கள், பூசை பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், மடி கணனிகள், சீமெந்து அச்சுக் கல் இயந்திரங்கள், சங்கீத உபகரணங்கள், மின்பிறப்பாக்கி, மோட்டார் சைக்கிள்கள் பண்டங்கள் வ/ப இலங்கை அரச வணிக நானாவித கூட்டுத்தாபனத்திடமிருந்து கடன் அடிப்படையில் பெற்றிருந்தது. அக் கொள்வனவுகள் தொடர்பாக மன்றத்தின் பணிப்பாளர் சபையின் அல்லது அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரத்தை பெற்றிருக்காததுடன் 2006 பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளையும் கடைபிடித்திருக்கவில்லை.

## 4.5 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரம்பொட பண்பாட்டு நிலையத்தின் பயன்பாட்டிற்காக ரூபா 5,810,000 தொகை பெறுமதியான மிட்சுபிசி டபள் கப் வண்டி ஒன்று ஆரம்ப கொடுப்பனவு ரூபா 1,000,000 மற்றும் மீதித் தொகை 60 மாதாந்த தவணைப் பண கொடுப்பனவு அடிப்படையில் குத்தகை முறையின் கீழ் 2014 நவம்பர் 26 ஆம் திகதி தனியார் கம்பனி ஒன்றில் இருந்து கொள்வனவு செய்திருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு இதற்காக செலுத்திய மொத்தக் கொடுப்பனவு ஆகிய ரூபா 1,070,290 தொகையினை முற்பணத்தின் கீழ் கணக்குகளில் காட்டப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் உரிய வரிசை அமைச்சில் இருந்து மன்றத்திற்கு பணம் வழங்கப்படாமையால் குத்தகை தவணைப் பணம் ஏதும் செலுத்தியிருக்கவில்லை. குத்தகையாளரினால் வாகனத்தை மீளப் பெற்றிருக்காததுடன் குத்தகையாளர் 2015 நவம்பர் 30 திகதி அளவில் வாகனத்தின் உரிமையை அவருக்கு உரித்தாக்கியிருந்தார். எவ்வாறாயினும் இந்த வாகனத்தை கொள்வனவு செய்வதற்காக 2010 திசெம்பர் 07 ஆம் திகதிய டீபீ/ஜீபீஎஸ்/130/9/2 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கை 150 இன் ஏற்பாடுகளை கடைபிடித்திருக்காததுடன் உரிய வரிசை அமைச்சின் மற்றும் நிதி அமைச்சின் அங்கீகாரத்தையும் பெற்றிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது மின்சார விலைப்பட்டி ஒன்று செலுத்துவதில் காணப்பட்ட தாமதத்தின் காரணமாக மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துவதில் காணப்பட்ட தாமதம் காரணமாக முறையே ரூபா 14,671 தொகை மற்றும் ரூபா 101,747 தொகையான மிகை விதிப்புக்கள் செலுத்தப்பட்டிருந்தன.

## 4.6 பதவியணியினர் நிருவாகம்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் தலைமை அலுவலகத்தின் 03 செயற்திட்டங்களுக்காக 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினர் 218 ஆகக் காணப்பட்டதுடன் உள்ளவாறான பதவியணியினர் 144 ஆகக் காணப்பட்டமையால் வெற்றிடங்கள் 74 ஆக இருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தொண்டமன் தொழிற்பயிற்சி நிலையத்திற்கான பதவியணியினர் மற்றும் சம்பள தொகைக்கான அங்கீகாரத்தைப் பெற்றிருக்கவில்லை.

(ஆ) தொண்டமன் விளையாட்டுத் தொகுதி செயற்திட்டத்திற்காக 2003 ஆண்டின் போது 21 பதவிகளை கொண்ட பதவியணி ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 20 பதவிகளுக்காக உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்படாமலிருந்தமையால் அச் செயற்திட்டத்தின் குறிக்கோள்களைச் செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

(இ) 2013 ஆண்டின் போது ரூபா 150,000 செலவிடப்பட்டு தயாரிக்கப்பட்டிருந்த மன்றத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறை 2016 வருட இறுதி வரை அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.

(ஈ) 2005 ஆண்டு முதல் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிதி) பதவிக்காக நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை நியமனம் செய்யாமல் 60 வருடத்தை மிகைத்த உத்தியோகத்தர் ஒருவரை ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தியிருந்தது.

(உ) தொண்டமன் பண்பாட்டு நிலையத்திற்காக முகாமைத்துவச் சேவை திணைக்களத்தினால் அங்கீகரித்திருந்த பதவிகளுக்கு மேலதிகமாக ஒரு எழுதுனர் மற்றும் 2 ஆலோசகர்கள் உட்பட 4 பதவிகள் அங்கீகாரம் இன்றி நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ஆண்டின் போது சம்பளமாக ரூபா 1,732,336 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமெனினும் மன்றத்தினால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 15 மாதங்கள் தாமதித்து 2016 செப்தெம்பர் 14 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 வருடாந்த அறிக்கைகளை சபையில் சமர்ப்பித்தல்

2003 ஜுன் 2 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 பந்தியின் பிரகாரம் மன்றம் ஆரம்பிக்கப்பட்ட 2007 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி வரையும் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 அகக் கணக்காய்வு

2009 ஜுன் 09 மற்றும் 2011 திசெம்பர் 23 திகதி முறையே இலக்கங்கள் DMA/2009(1) மற்றும் DMA/ADM/2011/1/26 கொண்ட முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் உள்ளகக் கணக்காய்வாளர் கணக்காளர் பதவியிலும் கருமங்கள் மேற்கொண்டிருந்தார்.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக மன்றத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டிற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

(ஆ) பாதீட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான மீண்டுவரும் செலவுகளுக்காக ரூபா 130,000,000 தொகை ஒன்று மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் உள்ளவாறான செலவு ரூபா 176,187,647 தொகையாகக் காணப்பட்டமையால் ரூபா 46,187,647 தொகை மதிப்பீட்டை மிகைத்து செலவிடப்பட்டிருந்தது. மதிப்பீட்டில் மீண்டுவரும் செலவுகளுக்காக காட்டப்பட்டிருந்த வகைப்படுத்தல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த வகைப்படுத்தலுக்கு இணங்க தயாரித்திருக்காத காரணத்தினால் ஒவ்வொரு செலவு விடயங்களில் ஏற்பாடுகள் மற்றும் உள்ளவாறான செலவுகளை ஒப்பீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | பதவியணியினர் நிருவாகம் | பதவியணியினர் நியமனம் செய்யாமை மற்றும் ஆள்சேர்ப்பு திட்டத்திற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமை. |
| (ஆ) | பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நிருவாகம் | பெறுகைகள் வழிகாட்டல்களுக்கு இணங்காமை. |
| (இ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | மதிப்பீட்டை மிகைத்து செலவு செய்தல் மற்றும் அங்கீகாரமின்றி கொள்வனவு செய்தல். |
| (ஈ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டமை. |
| (உ) | நிதிக் கட்டுப்பாடு | (i) கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் மீது மற்றும் உரிய ஆவணங்களில் ‘‘செலுத்தப்பட்டது’’ முத்திரை பதிக்கப்பட்டிருக்காமை.<br>(ii) கொடுப்பனவு காசேட்டில் பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தரினால் கையொப்ப மிட்டிருக்காமை. |